# O.S. No.49/2021

10.01.2023

**வா.சா.1**

**திரு மதியழகன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எந்த தேதியில் பிரதிவாதி என்னிடம் தொகை கேட்டால் என்றால் 23.07.2018 அன்று என்னிடம் தொகை கேட்டார் அன்றையதினமே ரூபாய் 15 லட்சம் தொகையை பிரதிவாதியிடம் கொடுத்தேன். வழக்குரையில் விவசாயம் மூலம் வந்த தொகையை பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அதற்காக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிராமத்தில் பதிவு செய்யப்படாத ஏலச்சீட்டு நடத்தி வருவதாக சொன்னால் தவறு. ரூபாய் 1லட்சம், 2 லட்சம், 5 லட்சம் மதிப்பீலான பதிவு செய்யப்படாத ஏலச்சீட்டுகளை நான் நடத்தி வந்தேன் என்றால் சரியல்ல. 2018 ஆம் ஆண்டிற்கு முன்பாக நான் நடத்தி வந்த ஏலச்சீட்டில் பிரதிவாதி சந்தாதாரராக இருந்து வந்தார் என்றால் சரியல்ல. பிரதி வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்து பார்த்துள்ளேன் என்றால் சரிதான். 25.06.2021 அன்று பிரதிவாதி மீது வடுவூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். இந்ந வழக்கு சம்பந்தமாக புகார் கொடுக்கவில்லை. எது சம்பந்தமாக புகார் கொடுத்தேன் என்றால் பணபிரச்சனை சம்பந்தமாக புகார் கொடுத்தேன். பிரதிவாதி காவல் துறை விசாரணைக்கு வரவில்லை. 29.06.2021 ல் இந்த பிரதிவாதி காவல் துறை முன்பு விசாரணைக்க ஆஜர்

ஆகி விளக்க உரை எழுதி கொடுத்துள்ளார் என்றால் இது சம்பந்தமாக எனக்கு தெரியாது. காவல் துறையில் கொடுத்த விளக்கத்தை பிரதிவாதி எதிர் வழக்குரையுடன் சேர்த்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும் அதனை நான் படித்து பாரத்தேன் என்றால் படித்து பார்க்கவில்லை. காவல் துறையில் கொடுத்த விளக்க உரையில் பிரதிவாதி 03.05.2018 ல் 1 லட்சம் 11.09.2018 ரூபாய் 2 லட்சம் 28.08.2020 ல் ரூபாய் 1 லட்சம் 13.03.2020 ல் 2 லட்சம் 29.08.2020 ல் 1 லட்சம் 12.09.2020 ரூபாய் 50 ஆயிரம் 04.01.2021 ல் ரூபாய் 1 லட்சம் 29.03.2021 ரூபாய் 50 ஆயிரம் ஆக கூடுதல் ரூபாய் 11 லட்சம் வாதியிடம் கொடுத்துள்ளதாக எழுதி சமர்ப்பித்துள்ளார் என்றால் அது போன்ற தொகை எதுவும் வாங்கவில்லை. பிரதிவாதி கொடுத்துள்ள விளக்க உரை விபரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக அந்த விபரம் தெரியாது என்று தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 29.06.2021 கு பிறகு எந்த தேதியில் பிரதிவாதியிடம் பணம் கேட்டேன் என்றால் பல முறை கேட்டுள்ளேன் போன் பேசியுள்ளேன் பிரதிவாதி போனை எடுக்கமாட்டார், பஞ்சாயத்து வைத்துள்ளேன். இந்த விபரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன் வழக்குரையில் சேர்த்துள்ளார்களா என்று தெரியவில்லை. எந்த தேதியில் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் 23.02.2021 அன்று அனுப்பியுள்ளேன். பிரதிவாதி வேலை பார்க்கும் அலுவலகத்திற்கும் மன்னார்குடி காலவாய்கரையில் பிரதிவாதி குடியிருந்த வீட்டிற்கும் பிரதிவாதியின் சொந்த ஊரான எடமேலையூர் வடக்மேலத்தெருவிற்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன். பிரதிவாதி வசிக்கும் முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு என்னால் அனுப்பபடவில்லை என்றால் சரியல்ல- வழக்குரையில் உள்ள சங்கதிகள் அனைத்தும்

என்னால் சொல்லப்பட்டது என்றால் சரிதான். வழக்குரையில் பிரதிவாதி 23.07.2018 ஆம் தேதி ரூபாய் 15 லட்சம் ரொக்கமாக கடன் பெற்றுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா 3 வது பக்கத்தில் வழக்கு மூலம் என்ற பகுதியில் வாதியிடம் பிரதிவாதி பல தேதிகளாக கடனாக தொகை பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக கடன் உறுதி சீட்டு எழுதி கொடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 23.07.2018 அன்று பிரதிவாதி என்னிடம் கடன் தொகை எதுவும் பெறவில்லை என்றும் அவ்வாறு கடன் பெறவேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதி வேலையில் இருந்ததால் நட்பு முறையில் கடன் கொடுத்தேன். பிரதிவாதி நான் நடத்தி வந்த ஏலச்சீட்டில் சந்தாதாராக இருந்து பலன் அடைந்ததால் கூடுதல் பாதுகாப்பிற்காக கொடுத்த பிராமிஸ்ரி நோட்டை பூர்த்தி செய்து இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான்எந்த தேதியில் கடன் கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்ல முடியாமல் பல தேதிகளில் கடன் பெற்றதாக சொல்லி தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 23.07.2018 ஆம் தேதி கடன் கொடுத்ததாக தாவாவில் கூறியுள்ளேன். 21.07.2021 அன்று பிரதிவாதி காவல் துறையில் கொடுத்த விளக்க கடிதம் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும் பதிவு செய்யப்படாத ஏலச்சீட்டு நடத்தி வந்ததால் என் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பயந்து பிரதிவாதியை மிரட்டி பணியவைக்க மறு பயனற்ற கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்து அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த சாட்சிகளின் முன்னிலையிலும் பிரதிவாதி என்னிடம் கடன் பெற்று அதற்கு ஆதரவாக பிராமிஸரி நோட்டு எழுதி கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 23.07.2018 அன்று பிரதிவாதி என்னிடம்

கடன் எதுவும் பெறவில்லை தாவா பிராமிஸிரி நோட்டு எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

M SHANTHI

Digitally signed by M SHANTHI
DN: cn=M SHANTHI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2023.01.10 18:04:11 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.